யாழ்ப்பாணம்
நல்லூர் பிரதேசசபை நூலகம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 சித்திரை 28 ஞாயிற்றுக்கிழமை (11-05-1997) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 164

# ஓமந்தை - கிளிநொச்சிப் பாதையில் புலிகள் பெரும் அளவில் குவிப்பு!

## போரில் வந்து இணையுமாறு பொது மக்களுக்கு அழைப்பு

வவுனியா, மே 11

வன்னியில் பெரும் தாக்குதல் ஒன்றை ஆரம்பிப்பதற்கான முஸ்தீபுகளில் படையினர் மும்முரமாக ஈடுபட்டுள்ள இவ்வேளையில் ஓமந்தைக்கும் கிளிநொச்சிக்கும் இடையிலான பிரதான தரைவழிப் பாதைகளில் புலிகள் பெருமளவு குவிக்கப்பட்டு வருகின்றனர் என்றும் -

பொதுமக்களைத் தாமாக முன்வந்து போரில் இணைந்து கொள்ளுமாறு புலிகள் அழைப்பு விடுத்துள்ளனர் என்றும் - வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்று நேற்றுத் தெரிவித்தது.

முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்கள் அடங்கிய வன்னிப் பகுதியைக் கைப்பற்றும் நோக்கில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றுக்கு அரச படைகள் தயாராகி வருகின்றன என்று புலிகளின் குரல் தெரிவித்ததாக ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்தது.

அத்துடன் வவுனியா, கிளிநொச்சி, ஆனையிறவு முகாம்களில் இருந்து தமிழர்கள் வாழும் பகுதிகளை நோக்கி படையினர் ஷெல் தாக்குதல்களை நடத்தி வருவதாகவும் புலிகளின் குரல் குற்றஞ் சாட்டி உள்ளது.

அதேசமயம் ஓமந்தை—கிளிநொச்சி பிரதான தரைவழிப் பாதையில் பெரும்பாலும் பெண்புலிகளே குவிக்கப்பட்டு வருகின்றனர் என்று மற்றொரு செய்தி தெரிவித்தது.

## வவுனியாவில் பாடசாலைகள் படையினரால் பொறுப்பேற்பு

கொழும்பு, மே 11

படையினர் தினமும் குவிக்கப்பட்டு வரும் வவுனியாவில் மூன்று பாடசாலைகள் இராணுவத்தினரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளன.

செட்டிக்குளம் மகாவித்தியாலயம், பாவற்குளம் பாடசாலை, சி.சி.ரி. என்.எஸ். என்று அழைக்கப்படும் இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலை ஆகியவையே இந்த மூன்று. பாடசாலைகளும் ஆகும் செட்டிகுளம் மகா வித்தியாலயத்தில் ஒரு வாரமாக நூற்றுக்கணக்கான பொலீஸார் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

3 தினங்களுக்கு மட்டுமே பாடசாலை தேவை என்று அதனைப் பொறுப்பேற்ற சமயம் பொலீஸார் தெரிவித்த போதும் தொடர்ந்து அவர்கள் அங்கு நிலைகொண்டுள்ளனர்.

பாவற்குளம் பாடசாலையிலும் நூற்றுக்கணக்கான படையினர் தங்கி உள்ளனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## செட்டிக்குளத்தில் புலிகள் தாக்குதல்

கொழும்பு, மே 11

செட்டிக்குளத்தில் உள்ள 8 ஆவது படைப்பிரிவு மீது புலிகள் நேற்று முன்தினம் இரவு பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

புலிகளின் தாக்குதலை படையினர் வெற்றிகரமாக முறியடித்து விட்டனர் என்றும் —

அந்த இடத்தில் இருந்து கைக்குண்டுகள், ரைபிள்கள், தொடர்பு சாதனம் ஆகியவை படையினரால் கைப்பற்றப்பட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தாக்குதல் குறித்து புலிகள் தரப்புச் செய்தி எதுவும் கிடைக்கவில்லை. (இ-5)

## ஈழத் தமிழர் பாதுகாப்பு மாநாடு புலிகள் மீதான தடை நீக்க கோரும்

### 24 ஆம் திகதி புதுவையில் நடத்த ஏற்பாடு

புதுடில்லி, மே 11

இந்தியாவின் புதுவை மாநிலத்தில் இம் மாதம்24 ஆம் திகதி ஈழத் தமிழர் பாதுகாப்பு மாநாடு நடைபெற உள்ளது.

புலிகள் மீது இந்தியா விதித்துள்ள தடை நீக்கப்பட வேண்டும் என்பது உட்பட பல கோரிக்கைகள் இந்த மாநாட்டில் விடப்பட உள்ளன.

★ தமிழீழத்தை இந்தியா அங்கீகரித்தல்.
★ அகதிகளுக்குப் பாதுகாப்பளித்தல்.
★ இலங்கைக் கடற்படையிடமிருந்து தமிழக மீனவர்களைக் காத்தல்.

போன்றவை ஏனைய கோரிக்கைகள் ஆகும்.

இம்மாநாட்டில் சமதா கட்சித் தலைவர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ராமதாஸ், மதுரை ஆதீனம், தமிழர் தேசிய இயக்கத் தலைவர் ப. நெடுமாறன், திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கோவை ராமகிருஷ்ணன், தமிழர் இயக்கப் பொதுச் செயலாளர் இயாகு உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

முச்சந்தி முரளி



அப்ப பிரச்சினையிலிருந்து நழுவப்பார்த்தாலும் இவை விட மாட்டினம் போல......!

## ஜி. சீ. ஈ. பெறுபேறுகள் 20 ஆம் திகதி

கொழும்பு, மே 11

கடந்த டிசம்பர் மாதம் நடந்த ஜி. சீ. ஈ. சாதாரண தர பரீட்சை முடிவுகள் எதிர் வரும் 20 ஆம் திகதி வெளிவரும் எனப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. (இ-3-10-150)

## கப்பல் சேவை

யாழ்ப்பாணம், மே 11

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு இன்று கப்பல் சேவை நடைபெறவிருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இன்று கப்பலில் பயணம் செய்ய பதிந்தவர்களைஇன்று காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

பட்டியல் இலக்கம் 569,

(8ஆம் பக்கம் பார்க்க)

## இரவு 9 மணி முதல் ஊரடங்கு

யாழ்ப்பாணம், மே 11

யாழ். நகரில் இரவு 9 மணி முதல் அதிகாலை 5 மணி வரை ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ளது.

யாழ். இராணுவ வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன. (உ)

## மேலும் 7 பேர் நேற்று விடுதலை

யாழ்ப்பாணம், மே 11

யாழ்ப்பாணத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 7 பேர் நேற்று அனுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

நீதிமன்றத்தில் வைத்து ஈ. பி. டி. பி. அமைப்பினரால் பொறுப்பேற்கப்பட்ட இவர்கள் கப்பல் மூலம் நாளை அழைத்துவரப்படுவர்.

அதேசமயம் கடந்த வாரம் விடுதலையான 12 பேர் நேற்

(8ஆம் பக்கம் பார்க்க)

## விமான இழப்புகள் தொடர்பான அறிக்கை பாதுகாப்பு அமைச்சிடம்

கொழும்பு, மே 11

அண்மைக் காலங்களில் விமானங்கள் வீழ்ந்து நொருங்கியது மற்றும் காணாமற் போனது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட உயர்மட்டக் குழு அவற்றில் 8 விமானங்கள் தொடர்பான அறிக்கையை பாதுகாப்பு அமைச்சிடம் கையளித்துள்ளது.

இந்த எட்டு விமானங்களில் நீர்கொழும்பு வாவியில் விழுந்த கிபிர் விமானமும் அடங்கும். (இ-10)

## குஜ்ரால் - சந்திரிகா 14 ஆம் திகதி சந்திப்பு

கொழும்பு, மே 11

மாலைதீவில் நாளை ஆரம்பமாகவிருக்கும் சார்க் மாநாட்டில் கலந்து கொள்ளும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தியப் பிரதமர் இந்தர்குமார் குஜ்ராலுடன் எதிர்வரும் 14 ஆம் திகதி பேச்சு நடத்தவிருக்கிறார்.

இந்தியப் பிரதமராக பதவி ஏற்ற பின் குஜ்ராலுடன் இலங்கை ஜனாதிபதி பேசுவது இதுவே முதல் தடவை ஆகும்.

இரு நாட்டு உறவுகள் குறித்து இரு தலைவர்களும் பேசுவர். இலங்கை இனப்பிரச்சினை குறித்தும் இருவரும் முக்கிய பேச்சு நடத்துவர் என்று தெரிவிக்கப்பட்டது

(இ-150-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா முருகேசு

கரப்பைக்குறிச்சி, வரணியைச்சேர்ந்த கந்தையா முருகேசு (உடையார்) 09-05-97 அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் பொன்னம்மாவின் அன்புக்கணவரும், சுப்பிரமணியம் (இளை முகாமையாளர்- தெ.ப நோ. கூ.ச. கொடிகாமம்), சிவராஜா (ஜேர்மனி), நீலாம்பிகை (முரசுமோட்டை), நடராஜா (உபதபாலதிபர், வரணி) ஜெயராஜா, கமலாம்பிகை (கொழும்பு), புஸ்பராசா (சுவிஸ்), ஆனந்தராசா (யாழ். பல்கலைக்கழகம்), உதயராசா, மீனாம்பிகை ஆகியோரின் அன்புத் தந்தையாரும், திலகவதி, மல்லிகாதேவி இராமநாதன், சாரதாதேவி. சுதாநயகி, இராசநாதன், வானதி, துளசி ஆகியோரின் அன்பு மாமனாரும், சுசீபன் (லண்டன்), நிருபன், விஜிதா, அனுஷா, சிவாஜினி, கோடீஸ்வரன், ஜனந்தன், யசோதா, நிஜந்தா, ரேணுகா, நிலாஜினி. பிரியகர்ஷனி, கிருத்திகா, ஜசிந்தன், பிரதாப், நிதர்ஷி, நிஷாந்தன், நிஷாந்தினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் 10-05-97 அன்று அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பி.ப.2 30மணியளவில் கொடிக்காட்டு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மு. நடராஜா
உபதபாலதிபர்
(வரணி)

உடையார் வளவு,
கரம்பைக்குறிச்சி,
வரணி.

(46856)

## மததேயு அந்தோனி

சென். ஜேம்ஸ் இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட மததேயு அந்தோனி 9-05-97 இல் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ் சென்ற மரியம்மாவின் அன்புக் கணவரும், மாகிறேட், பத்திநாதர், காலஞ் சென்ற விக்ரோறியா மற்றும் மத்தியூஸ் அல்போன்ஸ். மேரி மெக்டலீன், மேரிகொன்சாய்க், அருட்திரு ஞானப்பிரகாசம் (பங்குத்தந்தை, சூராவத்தை) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11 - 05 - 97) ஞாயிற்றுக்கிழமை காலை 11.00மணிக்கு(புதியநேரம்) அன்னாரின் இல்லத்திலிருந்து புனி தய்யாகப்பர் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின்னர் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அருட்திரு. அ. ஞானப்பிரகாசம்

சென். ஜேம்ஸ் வீதி,
இளவாலை

(46852)

## பொன்னையா துரைச்சாமி

வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகக்கொண்ட பொன்னையா துரைச்சாமி 10-05-97இல் காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் (இந்தியா) அன்புக் கணவரும், சந்திரசேகரம் (இந்தியா), ராகினி (ஜேர்மனி), மனோகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேஸ்வரியின் (இந்தியா) அன்பு மாமனாரும், சோதிலிங்கம், கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11- 5- 97) ஞாயிறு காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றாம்.

தகவல்:
சோதிலிங்கம்
(சகோதரர்)
திரு. சிவபாதம்
(ஆசிரியர்)

சிவலிங்கப்புளியடி,
466, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(46865)

## திருமதி கிருஷ்ணதாசன் யசோதை

சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கிருஷ்ணதாசன் யசோதை 08 - 05 - 97 அன்று கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த நாகநாதர் கிருஷ்ணதாசன் (யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், செல்வி கீர்த்தனாவின் பாசமிகு தாயாரும், வைத்திய கலாநிதி சி. பொன்னம்பலம் — கமலாம்பிகை தம்பதிகளின் அன்பு மகளும், கதிர்காமநாதன் (கணக்காளர் — கனடா), விஜயலக்ஷ்மி (அமெரிக்கா), டாக்டர் புவனேஸ்வரி (லண்டன்), மகேஸ்வரநாதன் (விரிவுரையாளர் — அமெரிக்கா), சுரேந்திரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தேவி (கனடா), விவேகானந்தன் (விமானப் பொறியியலாளர்), டாக்டர் முகுந்தகுமார் (லண்டன்), சியாமளா (அமெரிக்கா), விமலாதேவி, மனோன்மணி, மகேஸ்வரி, பரமேஸ்வரி, செல்வராணி, இரஞ்சிதமலர், யோகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11 - 05 - 97 இன்று ஞாயிற்றுக்கிழமை 171/5 டபிள்யு ஏ. சில்வா மாவத்தை, வெள்ளவத்தை கொழும்பு - 6 இல்லத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

அன்னாரின் துக்க அஞ்சலி சுன்னாகத்தில் அவரின் இல்லத்தில் இடம்பெறும்.

தகவல்
நா. யோகநாதன்
(மைத்துனர்)

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

(46858)

## வெளியீடு

சுழிபுரம், மே 11

அபிராமியந்தாதி ஆய்வுரை வெளியீட்டு வரிசையில் 89, 90, 91 ஆவது பாடல்கள் கருத்துரை வெளியீடு இன்று ஞாயிறு மாலை வழக்கம்பரை அம்மன் கோயிலில் இடம்பெறவுள்ளது.

(இ-28)

## ஏழாலை பகுதி அ. அட்டை

ஏழாலை வடக்கு 205, ஏழாலை கிழக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கான விசேட அடையாள அட்டைகள் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு புன்னாலைக்கட்டுவன்சந்தி சிவில் நிர்வாக அலுவலகத்தில் வழங்கப்படவுள்ளன.

(இ-5)

## சமய சந்திகளில்

நாரந்தனை- சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய வருடாந்த உற்சவம் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 23 ஆம் திகதி வரை நடைபெறும் தினமும் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை உற்சவம் நடைபெறும்.

(ஐ-4)

★ ★ ★

தொல்புரம் கொட்டடியம்பதி ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10-30 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 22 ஆம் திகதி பூரணை தினத்தன்று 108 கலச சங்காபிஷேகத்துடன் உற்சவம் நிறைவு பெறும்.

(ஐ-30)

★ ★ ★

பருத்தித்துறை அருள் மிகு ஆத்தியடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இம்மாதம் 22 ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும்.

(ஐ-118)

★ ★ ★

அல்வாய் வடக்கு அருள் மிகு அரசடி விநாயகர் ஆலய மகோற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

(ஐ-118)

★ ★ ★

துன்னாலை வடக்கு அல்லையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது. சிவப்பிரமம ஸ்ரீ ராம் கெங்காதரக் குருக்கள் தலைமையில் உற்சவ கிரியைகள் இடம் பெறும்.

(ஐ)

★ ★ ★

சுழிபுரம் பறாளாய் அருள் மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இம் மாதம் 21 ஆம் திகதி இரதோற்சவமும், மறு நாள் தீர்த்த உற்சவமும் இடம் பெறும்.

(ஐ-135-30)


**சிவா**

**மினி சினிமா**

தினசரி 10-30 — 2-00

கார்த்திக், கவுண்டமணி
நடித்த

**சிஷ்யா**
(புதிய வெளியீடு)


# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



விஸ்வப்பிரம்மகுல திலகர்

## இளையதம்பி செல்வநாயகம் (பத்தர்)

மலர்வு:
02 — 02 — 1904

உதிர்வு:
28 — 03 — 1997

அன்பும் பாசமும் நிறைந்த அப்பாவே!
எங்கே போனீரோ எம்மைத் தவிக்கவிட்டு!!
உங்கள் ஆத்மாசாந்தி பெற அன்னை ஸ்ரீ காமாக்ஷி அம்பிகையைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று 11 - 5 - 97 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்!

"செல்வ வாசா"
சொர்ணவடலி,
கொக்குவில் மேற்கு.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(சி/704)

# மரண அறிவித்தல்கள்

## வைத்திய கலாநிதி ஜெயகுமார்

ஊர்காவற்றுறை - கரம்பனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நீர்வேலி - அச்செழுவை வசிப்பிடமாகக் கொண்டவரும், அன்ரனீஸ் கிளினிக் உரிமையாளருமான வைத்திய கலாநிதி ஜெயகுமார் அவர்கள் 09 - 05 - 97 இல் மரணமானார்.

இவர் சற்குணராணியின் (தாதி உத்தியோகத்தர், யா/போதனா வைத்தியசாலை) அன்புக் கணவரும், காலஞ்சென்ற வைத்தியர் சிங்கராஜா, மேரி திரேசா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவரான சுப்பிரமணியம், கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜீவலதா (மாணவி, திருக்குடும்ப கன்னியர் மடம்), அன்ரன் ஜெஸ்லி( மாணவன், நெடுங்கேணி, மகாவித்தியாலயம்), தர்சினி (மாணவி, யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ராசகுமார் (ஜேர்மனி), செல்வமகள் (ஜேர்மனி), திருக்குமார் (வைத்தியர் - பாக்கியம் கிளினிக்), சந்திராவதி (கொழும்பு), ரவிக்குமார் (டென்மார்க்), வசந்தகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கணேசராசா (நீர்வேலி தெற்கு), ராசமலர் (நெடுங்கேணி), கனகேந்திரன் (நெடுங்கேணி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10 - 05 - 97 அன்று உரும்பிராயில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. கணேசராசா
(மைத்துனர்)

உரும்பிராய்
ஞானவைரவ கோயிலடி,
கோப்பாய் வீதி, உரும்பிராய்.

(46861)

## சிற்றம்பலம் கந்தசாமி

(கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் R. D. O)

மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்காலிகமாக முழங்காவிலில் வசித்தவருமாகிய சிற்றம்பலம் கந்தசாமி (இளைப்பாறிய R D O) அவர்கள் 29-4-97 இல் முழங்காவிலில் காலமாகிவிட்டார்.

இவர் ஐயுகத்தின் அன்புக் கணவரும், மோகனாம்பிகை (கனடா), திருஉமா (கனடா), குமுதினி (முழங்காவில்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் மங்களேஷ்வரன் (கனடா) மணிமாறன் (கனடா) ஆகியோரின் மாமனாரும், மதுரா, ஐங்கரன் (கனடா) ஆகியோரின் பேரனும், காந்தம்மா, சின்னம்மா, காலஞ்சென்ற முருகேசபிள்ளை, சரவணமுத்து ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற இராசையா, திருநாவுக்கரசு ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் முழங்காவிலில் 29-4-97 இல் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. காந்தம்மா
(சகோதரி)

மாக்கற் லேன்,
மானிப்பாய்.

(46868)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சி. பி. ஐ. விசாரணையை அடுத்து

# பீஹார் மாநில வர்த்தகர் ரயில் முன் பாய்ந்து தற்கொலை

பட்னா, மே 11

பீஹார் மாநிலத்தில் நடந்ததாகக் கூறப்படும் பெரும் கால்நடைத் தீவன ஊழல் தொடர்பாக சி. பி. ஐயினரால் விசாரிக்கப்பட்டுவந்த வர்த்தகப் பிரமுகர் ஒருவர் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

நரேஷ் கந்தர்வா என்ற இந்த வர்த்தகர் கடந்த வியாழனன்று இரவு ரயில் ஒன்றின் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டதாக ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்தது.

சி. பி. ஐ. அதிகாரிகளின் கேள்விக் கணைகள் தன்னை இந்த முடிவை எடுக்க வைத்துவிட்டது என்று கடிதம் ஒன்றில் அவர் எழுதியுள்ளார்.

27 கோடி 10 லட்சம் டொலர் பெறுமதியான இந்த நிதி மோசடியில் பீஹார் மாநில முதலமைச்சர் லாலு பிரசாத் யாதவ் உட்பட பல அரச உயர் அதிகாரிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது.

பிரதுதாப வர்த்தகரும் அவர்களில் ஒருவராவார். இவரஸ் திடீர் மரணம் விசாரணைகளைப் பாதிக்கும் எனத்தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# முபுட்டு - கபீலா இடையே புதனன்று அடுத்த சந்திப்பு?

கின்ஸாசா, மே. 11

ஸயர் நாட்டு நெருக்கடிக்கு அமைதித் தீர்வு ஒன்று ஏற்படும் எனத் தான் நம்புவதாக அமெரிக்கப் பிரதிநிதி பில் ரிச்சட்சன் தெரிவித்துள்ளார்.

தற்போது கபூனில் தங்கியுள்ள அதிபர் முபுட்டுவுக்கும், கிளர்ச்சியாளர் கூட்டணித் தலைவர் லோறன் கபீலாவுக்கும் இடையே மற்றொரு சந்திப்பை ஏற்படுத்த மத்தியஸ்தர்கள் முயற்சித்து வருகின்றனர்.

அநேகமாக எதிர்வரும் புதன்கிழமை இச் சந்திப்பு இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதிகாரங்களைப் படிப்படியாகக் கையளிப்பது என்று அதிபர் முபுட்டு கடைசியாகத் தெரிவித்த யோசனையை கபீலா நிராகரித்துவிட்டார்.

கிளர்ச்சிப் படைகள் கின்ஸாசாவை நோக்கித் தொடர்ந்து முன்னேறி வருகின்றன.

(ஐ-10)

# பாப்பரசரை கொல்லும் சதித் திட்டம் அம்பலம்

ரோம், மே 11

புனித பாப்பரசர் 2-வது அருளப்பர் சின்னப்பரை வத்திக்கானில் புனித இராயப்பர் சதுக்கத்தில் வைத்து படுகொலை செய்யத் திட்டப்பட்டிருந்த சதித் திட்டம் ஒன்று அம்பலமாகியுள்ளது.

பொஸ்னியா, ஈரான், துருக்கி ஆகிய நாடுகளைச் சேர்ந்த 18 பேர் அடங்கிய கும்பல் ஒன்று கடந்த ஏப்ரல் 16 ஆம் 18 ஆம் திகதிகளில் பாப்பரசரைக் கொல்லத் திட்டமிட்டிருந்தது என்றும் —

சிறிய கணனி ஒன்றுக்குள் குண்டுகளைப் பொருத்தி எடுத்துச் சென்று பாப்பரசர் செல்லும் பாதையில் அதனை வீசி வெடிக்கச் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும் இத்தாலி நாட்டு புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது.

(ஐ)

# அமெரிக்காவில் வியட்நாம் தூதர்

வாஷிங்டன், மே 11

அமெரிக்கா வியட்நாமுடன் மீண்டும் தனது இராஜீகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளதை அடுத்து முதலாவது வியட்நாமிய தூதர் வாஷிங்டனுக்குச் சென்றுள்ளார்.

லீ வான் பாங் என்ற அந்த வியட்நாமியத் தூதர் அமெரிக்காவுடன் தாம் இணக்கமாக ஒத்துழைக்க விரும்புவதாகத் தெரிவித்தார்.

அவர் அதிபர் கிளின்ரனிடம் தமது நியமனப் பத்திரங்களை எதிர்வரும் வியாழனன்று கையளிப்பார்.

(ஐ)

## உலக அரங்கில்

### பாகிஸ்தான் கருத்து

இஸ்லாமபாத், மே 11

தற்போதைய பேச்சுவார்த்தைகளில் காஷ்மீர் விவகாரத்தையும் சேர்த்துக் கொள்ள இந்தியா இணங்காவிட்டால் பேச்சுக்களில் முட்டுக்கட்டை ஏற்படும் என்று பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

காஷ்மீர் பிரச்சினை பற்றிப் பேச இந்தியா முன்வந்தால் இந்தப் பேச்சுவார்த்தைகளில் ஓரளவு முன்னேற்றத்தைக் காணமுடியும் என்று பாகிஸ்தான் வெளிநாட்டமைச்சர் அயூப்கான் தெரிவித்துள்ளார்.

இதேவேளை—

பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷெரீப்பும் இந்தியப் பிரதமர் குஜ்ராலும் நாளை மாலைதீவில் முதன் முறையாகச் சந்திக்கவுள்ளனர்.

(ஐ)

# மூன்றாவது நாளாக தமிழகக் கலவரம் தொடர்கின்றது

சென்னை, மே 11

தமிழகத்தின் தென்மாவட்டங்களில் சாதிக் கலவரங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

காமராஜர் மாவட்டத்தில் மூன்றாவது நாளாகத் தொடர்ந்து நடக்கும் கலவரத்தில் இதுவரை 10 பேர் பலியாகியுள்ளனர். நேற்று முன்தினம் சிவகாசி நகரமன்ற உறுப்பினர் உட்பட 18 பேர் கலவரங்களின்போது காயமடைந்தனர்.

இந்த மாவட்டத்தில் புதிய போக்குவரத்துக் கழகத்துக்கு வீரன் சுந்தரலிங்கனாரின் பெயர் சூட்டப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் ஒரு சாரார் தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டுள்ளனர்.

ஸ்ரீவில்லிப்புத்தூர், சிவகாசி, விருதுநகர்ஆகிய இடங்களில் தொடர்ந்து மூன்றாவது நாளாக பஸ் போக்குவரத்து தடைப்பட்டிருக்கிறது.

வர்த்தக நிலையங்களும்' எரிபொருள் நிலையங்களும் மூடப்பட்டுள்ளன.

கலவரப் பகுதிகளுக்கு நேரில் சென்று நிலைமையை அவதானித்து அறிக்கை சமர்ப்பிக்க 5 அமைச்சர்கள் கொண்ட உயர்குழு ஒன்றை முதல்வர் கருணாநிதி நியமித்துள்ளார். (ஐ)

### இந்தியா நல்லெண்ண நடவடிக்கை

புதுடில்லி. மே 11

போதை மருந்து தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டு இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 9 பாகிஸ்தானியர்களை இந்திய அரசு நேற்று பாகிஸ்தானுக்குத் திருப்பி அனுப்பியது.

நல்லெண்ண நடவடிக்கையாக இவர்கள் விடுவிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

### லெபனானில் பாப்பரசர்

புனித பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் நேற்று லெபனானுக்கு முதல் முறையாக விஜயம் செய்தார்.

பாப்பரசரின் விஜயத்தை ஒட்டி தீவிர பாதுகாப்பு முன்னேற்பாடுகள் அங்கு செய்யப்பட்டுள்ளன. சுமார் 20 ஆயிரம் படையினர் முக்கிய இடங்களில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

# பிரிட்டனில் அமைதியாக நடந்த ஆட்சி மாற்றம்

# எமக்குக் கற்றுத்தரும் அரசியல் பாடம் என்ன?

ஆங்கிலேயர்கள் கீழைத் தேச நாடுகள் பலவற்றை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்து பின் அவற்றைக் கைவிட்டு வெளியேறிய போது தமது அடிச்சுவட்டைப் பதித்துவிட்டே சென்றனர்.

பழகிய தோசம் எமது நாட்டவர்களைப் பற்றிக் கொள்ள அவர்களின் நெறி முறைகளைத் தொடர்ந்து பின்பற்றினோம். ஆனால் இதில் வேதனைக்குரிய விடயம் நல்லவற்றைக் கைக்கொள்ளாது பெரும்பாலும் தீயவற்றைப் பின்பற்றியதாகும்.

அண்மையில் இங்கிலாந்தில் நடைபெற்ற தேர்தல் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பலபாடங்களை உணர்த்துகிறது. அதுதான் அரசியல் நாகரிகம்.

### எமது தேர்தல்கள்

நாம் தேர்தல் வந்ததும், அதில் வெற்றி பெறுவதற்காக பல குறுக்கு வழிப்பிரசாரங்களைக் கையாள்வோம் ஆட்சியில் இருக்கும் அரசு கடந்த காலங்களில் விட்ட தவறுகள், செய்த மோசடிகள், கட்சித் தலைவர்களின் தனிப்பட்ட குறைபாடுகள் ஆகியவற்றைக் கையாண்டு வாக்குவேட்டையாடுவோம். இதனால் எமது கொள்கை என்னவென்றோ எமது கட்சி ஆட்சிக்கு வந்தால் என்னென்ன செய்யும் என்றோ மக்களுக்குத் தெரியாது. மாற்றுக் கட்சியினருக்கு எதிராக நாம் தொடுக்கும் பாணங்களே மக்கள் மனதில் நிற்கும். இருபகுதியினரும் ஒருவர் மீது ஒருவர் வசை மாரி பொழிய அதனால் உணர்ச்சி வசப்படும் சாதாரண மக்கள் தமக்கிடையில் கைகலப்பில் ஈடுபடுவதில் முடிவடையும்.

இங்கிலாந்தில்இடம் பெற்ற தேர்தலில் தொழிற்கட்சியினர், அரசாங்கத்தின் மீது சேற்றை வாரி வீசவில்லை. தமது கட்சியின் கொள்கையையே விளக்கினார்கள். தாம் பதவிக்கு வந்தால் என்னென்ன செய்வோம் என விளக்கினார்கள்.

### வெற்றி குறித்து நிதானம்

தேர்தலில் தொழிற்கட்சி அமோக வெற்றியீட்டியது. உடனே கட்சியின் தலைவர் துள்ளிக் குதிக்கவில்லை. ஆட்சியிலிருந்தவர்கள் செய்த தவறுகளை மக்கள் கண்டுகொண்டதனால் தான் தம்மை அரியணையில் ஏற்றியுள்ளனர் என மார்தட்டவில்லை. மக்கள் தம்மீது நம்பிக்கை வைத்து, தாம் முன்வைத்த கொள்கைகளை ஏற்று அங்கீகரித்துள்ளனர் எனவும், அவர்களுடைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டிய பாரிய பொறுப்பு தம்மிடம் வந்து சேர்ந்துள்ளதாகவும் நிதானத்துடன் அறிவித்தார். தமது கன்னிப் பேச்சின் போது அவர் மாற்றுக்கட்சியினரைப் பற்றி ஒரு வார்த்தையும் கூறவில்லை.

எமது நாடுகளிலே இப்படி நடப்பதில்லை. வெற்றி பெற்ற கட்சியினர் அளவிலா மகிழ்ச்சியில் துள்ளிக் குதிப்பார்கள். வெற்றி விழாக்கள் நடத்துவார்கள். மேடைக்கு மேடை மாற்றுக்கட்சியினரின் கடந்தகால ஆட்சி பற்றியும், அவர்கள் காலத்தில் விட்ட தவறுகள் பற்றியும் திரும்பத் திரும்ப விவரித்து அதனால் ஏற்பட்ட வெறுப்பிலேதான் தம்மை ஆட்சியமைக்க அனுமதித்தனர் எனவும் கூறுவர்.

### விசாரணைக் குழுக்கள்

ஆட்சிக் கட்டில் ஏறியவுடன் பல ஆணைக்குழுக்கள் அமைக்கப்படும். கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல்கள், தவறுகள் பற்றி அவைகள் விசாரணை நடத்தும். புதியவர்களின் ஆட்சிக் காலத்தில் பெரும்பகுதி இவ்வாறு ஆணைக்குழுக்கள் அமைப்பதிலும் விசாரணை நடத்துவதிலும் கழிந்துவிடும். [illegible] கள் ஆட்சியிலுள்ள கட்சியின் கொள்கை என்ன என்பது பற்றியே சிந்திக்க மாட்டார்கள். இதே நேரத்தில் தேர்தலின் போது கட்சியின் வெற்றிக்காக உழைத்தவர்கள் தமது தேவைகளை நிறைவேற்ற தமது நாடாளுமன்ற உறுப்பினர்களையோ அமைச்சர்களையோ நாடுவர். ''முகத்திற்கு அஞ்சி வேசையாடினால் குலத்திற்கு ஈனம்'' என்பது போல இவர்கள் அடுத்த தேர்தலில் ஊழல் குற்றச்சாட்டிற்கு ஆளாவர். மீண்டும் ஆணைக்குழு உருவாகும். இதுவே தொடர் கதை; நாட்டுநலன் கருதிச் செயற்படுவது மிக மிகக் குறைவு.

**- சிவசுந்தரன் -**

தோற்றுவிட்ட கட்சிக்காரர்கள் தேர்தலில் முறைகேடுகள், ஊழல்கள் நடந்துவிட்டதாக உடன் அறிக்கை விடுவார்கள். அதனை வைத்துப் பிரசாரங்கள் நடத்துவர். முறைகேடுகள் இடம்பெற்றதாஇல்லையா என்பது அவர்களுக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்காது. மக்களிடம் தமது செல்வாக்கு சரிந்துவிட்டதை மூடி மறைக்கும் தந்திரமே இது.

இங்கிலாந்தில் தோற்றுவிட்ட கொன்சர் வேட்டிவ் கட்சியின் தலைவர், அதற்குத் தார்மீகப் பொறுப்பேற்று உடனே கட்சியின் தலைவர் பதவியைத் துறந்துவிட்டாரேயன்றி, தமது தவறுகளைப் பூசி மெழுக முற்படவில்லை. எமது நாடுகளில் இவ்வாறு பதவி விலக மாட்டார்கள். பரம்பரைச் சொத்தாக அதனை வைத்துக் கொண்டு அடுத்த தேர்தலில் பார்ப்போம் என மார்தட்டுவார்கள்.

இங்கிலாந்தில் உள்ள கட்சிகள் தமது கொள்கைகளில் முற்று முழுதாக வேறுபட்டவை. இங்கு அப்படியில்லை. எமது நாடுகளில்ஒரே மாதிரியான கொள்கைகளில் பல கட்சிகள் தலைமைதான் வேறுபடும். அதாவது தலைவர் யார் என்பதுதான் வேறுபாடு. இதனால்தான் இங்கு பல சிறு;கட்சிகள் இணைந்து கூட்டணி அமைத்து ஆள வேண்டியுள்ளது. இங்கிலாந்தில்எந்த ஒருகட்சியும் பூரண பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வருவதே வழக்கம்.

இங்கிலாந்தில் தான் முதன் முதலில் சனநாயக முறை மலர்ந்தது இன்றும்சிறப்பாக உள்ளது. அதனைப் பின்பற்றிய நாம் அரைகுறையாகப் பின்பற்றி அழிவுப் பாதையில் செல்கிறோம். தமிழர் பிரச்சினையில் இணைந்து செயற்படப் பிரதான இது கட்சிகளுக்கும் புத்தி சொல்ல ஒரு ஆங்கிலேயர் தான் தேவைப்பட்டார்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவியோகி
சுத்தானந்த பாரதியார்
அவர்களின்

# நூற்றாண்டு நினைவுநாள்

தம்மும், தமிழர் கூட்டமும், தமிழ் பேசும் நல்லுலகமும், தமிழ்க் கலையும், கலாசாரமும், புதுப் பொலிவும், வலுவும் பெற்று நிலவத் தம் தவப்பயனைப் பயன் செய்தவாறு தம்மை அர்ப்பணித்து நீண்டகாலம் பன்முகப் பணிபுரிந்து சமாதிப் பேறெய்திய பெரியார்.

**க. கனகராசா**

(சி/700)

# நன்றி நவிலல்

அமரர்
யோசெப் வின்சென்ட் பொன்னையா
அவர்களின் மறைவையொட்டி

எம்மில்லம் வந்து அனுதாபம் தெரிவித்த குரவர்கள், கன்னியர்கள், ஆசிரியர்கள், மாணவ - மாணவியர்கள், சக ஊழியர்கள் அனைவருக்கும், சம்பத்திரிசியார் கல்லூரியின் சிற்றாலயத்தில் இரங்கற் திருப்பலியும் ஏனைய சடங்குகளும் சிறப்பாக நடந்தேற உதவிய பாடசாலை அதிபர், அருட்தந்தையர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும், மலர் வளையங்கள் சாத்தியும், கண்ணீர் அஞ்சலி, அனுதாப மடல்கள், அனுதாபக் கடிதங்கள் மூலம் அனுதாபத்தை தெரிவித்தோருக்கும் —

இறுதி ஊர்வலம் சிறக்க உதவியோருக்கும், இறுதிக் கிரியைகளில் பங்கேற்ற அன்பர்கள், நண்பர்கள், அயலவர்கள், உறவினர்கள், அருட்சகோதரிகள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**கமலா பொன்னையா**
(மனைவி)
**சகோதரர்கள், சகோதரிகள்.**

838, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-697)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்: 14 — 04 — 1928

மறைவு: 12 — 04 — 1997

அமரர்
வேலுப்பிள்ளை தில்லைநாதர்
(மறவன்புலோ)

வன்மமிகு தாது வளருமொரு பங்குனிநாள்
பன்னு மூபத்தின் பூர்வபட்சப் பஞ்சமியில்
- மன்னுசனி
இந்நாள் 'தில்லைநாதர்' இவ்வுலகு நீத்தமரர்
பொன்னுலகு சென்றனரே சிறந்து.

எமது தந்தை அவர்களின் இறுதிக் கிரியைகள் நடைபெற்ற போது வருகைதந்து எமக்கு ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், தென்மராட்சிப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், கைதடி ப. நோ. கூ. சங்க ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள் உரித்தாகும்.

இன்று (11-05-97) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது அஞ்சலி நிகழ்விலும் பங்குபற்றும்படி அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி!

தி. மகாலிங்கம் (கி. சே. அ. மறவன்புலோ)
திருமதி விஜயகோபால் அருட்சோதி (ஆசிரியை)
திருமதி சிவகுரு தனலட்சுமிதேவி (ஆசிரியை)
செல்வி தி. கோதைநாயகி
தி. தங்கவேல் (கைதடி ப. நோ. கூ. ச.)

மறவன்புலோ,
சாவகச்சேரி.

(46827)

## முறைசாரா பயிற்சிகள்

கொழும்புத்துறை, மே 11
யாழ். புனிதசாள்ஸ் மகா வித்தியாலய முறைசாராக் கல்விப் பயிற்சி நெறிகள் விரைவில் ஆரம்பமாக உள்ளன.

வர்த்தகச் சித்திரம், உடைகள் தைத்தல் ஆகியபயிற்சிகளுக்கு ஜி. சி. ஈ. சாதாரண தரம் வரை கல்வி கற்ற இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-30)

## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், மே 11
ஈச்சமோட்டை சன சமூக நிலையத்தின் 55 ஆம் ஆண்டு நிறைவினை முன்னிட்டு ஈச்சமோட்டை விளையாட்டுக் கழக அனுசரணையுடன் ஏற்பாடு செய்யப்படவுள்ள மென்பந்துக்கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன, இச்சுற்றுப் போட்டி 7 பேர் கொண்ட 12 ஓவர் போட்டியாக அமையும் விண்ணப்ப முடிவுதினம் எதிர் வரும் 18 ஆம் திகதியாகும்.

(ஐ-4)

## அஞ்சலிப் பேருரை

யாழ்ப்பாணம், மே 11
காலஞ்சென்ற அகில இலங்கை இந்துமத குருபீடாதிபதி கலாநிதி சிவஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவாச்சாரியாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், அஞ்சலிப் பேருரையும் இன்று ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு அவரது ஆலயமான ஸ்ரீதேவி இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

ஈச்சமோட்டை ஞான வைரவர் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ தி.பாலசுப்பிரமணியக் குருக்கள் அஞ்சலிப் பேருரை நிகழ்த்துவார்.

(ஐ)

## விசேஷ ஆராதனை

யாழ்ப்பாணம், மே 11
கொழும்பு போதகர் எஸ். ஜி. நிரஞ்சன் வழங்கும் விசேஷ ஆராதனை இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் 4 மணிவரை பருத்தித்துறை மருதடி பிரதான வீதியிலுள்ள ''அசெம்பிளி ஒப் கோட்'' மண்டபத்தில் நடைபெறும்.

(ஐ-4)

## அதிபர் சேவை தரம்-I சேவை நீடிப்பு

பருத்தித்துறை,மே 11
இலங்கை அதிபர் சேவையில் தரம் 1 இல் உள்ளவர்களுக்கான சேவை நீடிப்பு மாகாண கல்வி அமைச்சின் செயலாளராலேயே வழங்கப் படவுள்ளது.

55 வயதைப் பூர்த்தி செய்ய உள்ளவர்கள் மூன்று மாதங்களுக்கு முன்னர் சேவை நீடிப்புக்கான படிவத்தைப் பெற்று கோட்டக்கல்வி அதிகாரியின் சிபார்சுடன் மாகாண கல்வி அமைச்சுக்கு விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-118)


# தேவை

எம் நிறுவனத்தில் பணி புரிவதற்கு படித்த பெண் பிள்ளைகள் தேவைப்படுகின்றனர்.

நேரில் தொடர்பு கொள்ளவும்.

**துர்க்கா திருமண சேவை,**
178, [illegible] வீதி,
யாழ்ப்பாணம்.

(46863)


# பத்திமா அன்னை திருநாள்

பண்டத்தரிப்பு பத்திமா அன்னையின் திருநாள் திருப்பலி 13—05—97 (செவ்வாய்க்கிழமை) காலை 7. 45 மணிக்கும் (புதிய நேரம்) நற்கருணை ஆராதனை 12 — 05 — 97 மாலை 4. 45 மணிககும் இடம்பெறும்.

**பங்குத்தந்தை**

(46853)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 05 — 08 — 1963

மறைவு: 22 — 04 — 1996

செல்வன்
சிவராஜேஸ்வரன் வேலுப்பிள்ளை
(இராசன்)

**திதி: 11-05-1997**

மறைந்தும் மறையாத எம் அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மைப் பிரிந்து ஆண்டு ஒன்று சென்றிடினும் உங்கள் நினைவுகள் என்றும் எங்களுடன் கலந்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

அன்பு அம்மா, அக்கா,
தம்பி, தங்கை, மைத்துனர்,
மைத்துனி, மருமகன்,
பெறாமகன், பேரன், மாமாமார் மற்றும்
உற்றார், உறவினர், நண்பர்கள்.

''செல்வஸ்தான்''
சித்தன்கேணி.

(46843)

# முதலாம் வருட நினைவஞ்சலி



அமரர் முத்துலிங்கம் இராசேந்திரம்
(உரிமையாளர் - இலட்சுமி இயந்திர மரவேலைத் தொழிற்சாலை, நல்லூர்.)

மலர்வு: 10 - 07 - 1950

உதிர்வு: 23 - 04 - 1996

திதி: 11-05-97

தந்தையே, அன்பின் ஒளிவிளக்கே, பண்பின் சிகரமே, பாசத்தின் உறைவிடமே! எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டதேனோ? எம் இதயம் வேதனைத் தீயில் வேகுகின்றதே; நித்தமும் கலங்குகிறோமே.

பார்க்கும் இடமெல்லாம் நிற்கும் நீங்கள்
பாரினில் இல்லாது போனதுமேனோ!
ஆண்டு ஆயிரம் ஆனாலும் ஆறாது நம் துயர்;
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும்
இறைவனை இறைஞ்சுவோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:

மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்,
மைத்துனிமார், உறவினர்கள், நண்பர்கள்.

இல: 46, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(46841)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோரின் பெற்றோர் நாளை அரச அதிபரைச் சந்திப்பர்

## மகஜர் கையளிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 11

குடாநாட்டில் கைதானோர் மற்றும் காணாமற் போனோரின் பெற்றோர்களும் உறவினர்களும் நாளை திங்கட்கிழமை யாழ். அரச அதிபரைச் சந்திக்கவுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள். காணாமற் போனவர்கள் தொடர்பாக எந்த வித பயனுள்ள நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாத நிலை நீடிப்பதைச் சுட்டிக்காட்டி யாழ். அரச அதிபரிடம் மகஜர் ஒன்றை அவர்கள் சமர்ப்பிக்க உள்ளனர்.

கடந்த வியாழனன்று மேற்படி பாதுகாவலர் சங்கத்தின் தலைமைப் பணிமனையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் இது பற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதி செல்வி ஆனும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

தனது பிள்ளைகளின் கதி குறித்து அரச அதிகாரிகளையும், படை அதிகாரிகளையும் நேரில் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்கென பத்துப் பேர் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஐ)

# தளபாடங்களை திருத்த பாடசாலைகளுக்கு நிதி

பருத்தித்துறை, மே 11

யாழ். மாவட்ட பாடசாலைகளிலுள்ள தளபாடங்களைத் திருத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பாடசாலை அதிபர்கள் சிறு திருத்த வேலைகளுக்கான படிவங்களைத் தத்தம் கோட்டக் கல்வி அலுவலகங்களில் பெற்று கோட்டக் கல்வி அதிகாரியின் சிபார்சுடன் கல்வித் திணைக்கள பிரதம பொறியிலாளருக்கு அனுப்பி அனுமதி பெற்று தளபாடத் திருத்த வேலைகளை ஆரம்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

கட்டடத் திருத்தங்கள் தொடர்பாக முன்கூட்டியே பொறியியலாளரின் அனுமதியைப் பெற்றபின்பே கட்டடத் திருத்த வேலலகளை ஆரம்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## மந்திகை- புறாப்பொறுக்கி வீதியில்

# வேலி மறைப்புகள் அகற்றப்பட்டன

வடமராட்சிப் பகுதியில் மந்திகை தொடக்கம் புறாப் பொறுக்கி வரையில் உள்ள பருத்தித்துறை — யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கு இருமருங்கிலுமுள்ள வீடுகளின் வேலிகள் அப்புறப் படுத்தப்பட்டுள்ளன.

படையினரின் வேண்டுதலின் பேரில் பனமட்டை, கிடுகுகளினால் அமைக்கப்பட்ட வேலிகளே அப்புறப் படுத்தப்பட்டன.

இப்பகுதியில் அல்வாய் கிழக்கு பருத்தித்துறை நகரின் மேற்குப்புறம் ஆகிய இடங்களில் கடந்த வாரம் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கை இடம் பெற்றது.

(ஐ-173)

# தாதிகள் சேவைக்கு பயிற்சியாளர்சேர்ப்பு

பருத்தித்துறை, மே 11

யாழ். தாதிகள் பயிற்சியில் கல்லூரிக்கு இவ்வாண்டுக்கான (1997) மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான புதிய வகுப்புக்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இம்முறை அதிகளவு பயிச்சியாளர்கள் தாதிகள் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இவர்கள் நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

(ஐ-18)

## பருத்தித்துறை கொடிகாமம் பஸ் சேவை

வடமராட்சி, மே 11

பருத்தித்துறை - கொடிகாமம் இ. போ. ச. பஸ் சேவை கடந்த வெள்ளிக் கிழமை முதல் ஆரம்பமாகியுள்ளது.

பருத்தித்துறையிலிருந்து தினமும் காலை 6.30 மணி, 9.30மணி பிற்பகல் 2.30மணி ஆகிய நேரங்களில் கொடிகாமத்துக்குச்சென்று அங்கிருந்து உடன் பருத்தித்துறைக்குத் திரும்புகின்றது. (இ-173)

## செவிப்புலன் குறைந்தோர் ஒலிவாங்கி

வடக்கு - கிழக்கு மாகாண சபைக்குட்பட்ட பாடசாலைகளில் கற்கும் காது கேட்கும் தன்மை குறைந்த மாணவர்களுக்கு காது கேட்கும் ஒலிவாங்கி (Earphone) வழங்குவதற்கு கல்வி அமைச்சு முன்வந்துள்ளது.

இவ்வாறான மாணவர்களை இனங்கண்டு அண்மையிலுள்ள மாவட்ட வைத்திய அதிகாரியின் சிபார்சுக் கடிதத்துடன் மாவட்ட கல்விப் பணிப்பாளருக்கு அறிவிக்குமாறு பாடசாலை அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

(இ-118)

## பிறப்பு - இறப்பு பதிவாளர்

கொழும்புத்துறை, மே 11

யாழ். நகர் கிழக்குப் பகுதிக்கு பிறப்பு, இறப்புப் பதிவாளராக டாக்டர் ஜோனசன் ஆனந்தராஜா லோறன்ஸ் கடந்த முதலாம் திகதி முதல் யாழ். அரசாங்க அதிபரால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

(ஐ-30)

# தேசிய 'டெங்கு' வாரம் நாளை முதல் அனுஷ்டிப்பு

நாளை 12 ஆம் திகதி முதல் எதிர்வரும் 19 ஆம் திகதிவரை தேசிய 'டெங்கு' வாரம் குடாநாட்டிலும் அனுஷ்டிக்கப் படவுள்ளது. இதனை ஒட்டி வட பிராந்திய சுகாதார சேவைகள் பதில் மாகாணப் பிரதிப்பணிப் பாளர் டாக்டர் க.தா. சிவபாதம் விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பு இது:

இதுவரை காலமும் ஒரிரு நுளம்பு வகைகளால் மலேரியா நோய் எமது பகுதிகளில் பெருகி வருவது யாவரும் அறிந்ததே. தற்போது பகலில் கடிக்கும் ''ஈடீஸ் ''இஜிப்ரய்'', ஈடீஸ் அல்போபிக்ரஸ்''என்னும் நுளம்பு வகைகளினால் டெங்குக் காய்ச்சல் நோய் எமக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. இந்த நிலமையைக் கருத்திற் கொண்டு தேசிய டெங்கு வாரம் 12.05.97 முதல் 19.05.97 வரை அனுஷ்டிக்கப்பட உள்ளது. இவ் வாரத்தில் பரந்துபட்ட சமூக பங்களிப்பு மூலம் நுளம்பு உற்பத்தி ஆகும் இடங்களைக் கண்டறிந்து அழிக்கும் வேலைகள் செய்யப்பட உள்ளன.

பொது மக்கள் நுளம்புகளால் ஏற்படும் பிரச்சினைகளை உணர்ந்து தத்தமது காணிகள், வீடுகள், பொது இடங்கள் ஆகியவற்றில் காணப்படும் நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை இனங்கண்டு அழித்தல் அவசியமாகும்.

இதற்கான ஆலோசனைகள் உதவிகள் ஆகியவற்றை அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், சுகாதாரநிறுவனங்கள் பயிற்சி பெற்ற தொண்டர்கள் ஆகியோர் மூலம் பெற முடியும். நுளம்பு உற்பத்தி ஆகும் இடங்களான சிரட்டைகள், பேணிகள், மீன்றின்கள், பிளாஸ்ரிக்கலன்கள், சட்டி, பானைகள், பீலிகள், ரயர்கள், சிறிய போத்தல்கள், பூச்சாடிகள். நீர்த்தாங்கிகள், வடிகால்கள், சிறிய நீர்த்தேக்கங்கள் ஆகியவற்றில் ஒரு கிழமைக்கு மேல் நீர் தங்காது அவற்றுக்கான உரிய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

இத்தகைய செயற்பாடுகளை கிராம மட்டத்தில் சுகாதாரக் குழுக்களை அமைத்தும் இயங்காமல் இருக்கும் குழுக்களைப் புதுப்பித்தும் நிறைவேற்றலாம். இக்குழுக்கள் தத்தமது பகுதிக்கேற்ப வளங்களை ஒருமுகப்படுத்தி திட்டமிட்டு செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

இவ்வாரத்தில் தொடங்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்ந்தும் செயற்படுத்தப்பட வேண்டும். சுகாதாரப் பகுதியினர் பூரண ஒத்துழைப்பு வழங்குவர். சகல தரப்பினரும் இக்காரியத்திற்குக் கைகொடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

★

## வேலணையில்

# 605 குடும்பங்களுக்கு ரூ. 5 ஆயிரம் கொடுப்பனவு

நெடுந்தீவு, மே 11

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் முதற்கட்டமாக 605 குடும்பங்களுக்கு மீளக் குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இப்பிரிவில் உள்ள பிரதான குடியிருப்பாளர்கள் தங்கள் பிரிவு கிராம அலுவலர் அலுவலகத்தில் தங்கள் பெயரையும் வங்கி இலக்கத்தையும் சரிபார்த்து உரிய வங்கிகளில் கொடுப்பனவை பெற்றுக் கொள்ளலாம் என வேலணை உதவி அரசாங்க அதிபர் தெரிவித்தார். (ஐ-111)


# வாழ்த்து!

கோப்பாய் தெற்கு தென்கோவை

அருள்மிகு

ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் கோயில்

மகா கும்பாபிஷேக விழா

விநாயகப் பெருமானின் திருவருளால்
மிகச் சிறப்பாக நடைபெற
இறையாசி வேண்டி வாழ்த்துகிறேன்.

து. பாஸ்கரசர்மா.
பிரதமகுரு
(நெழுவினி விநாயகர் தேவஸ்தானம்)
நெடுந்தீவு.

(46850)


ஓம்

## ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில்

### கொழும்பு - 13



மேற்படி கோயில் தேவஸ்தானத்தின் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் கடந்த 20-4-97 ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு இனிதே நடைபெற்றது.

இச்சித்திரத்தேரைசிற்ப சாஸ்திரி நீர்வேலியைச் சேர்ந்த திரு. செல்லையா விஸ்வலிங்கம் குழுவினர் மிக குறுகிய காலத்தில் வடிவமைத்து தந்துதவினர். இந்தவைபவத்தில் திரு. செல்லையா விஸ்வலிங்கம் அவர்களை ஆலய தர்மகர்த்தா சபையினர், புகையிலை வர்த்தகர்கள், தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து கௌரவித்து அவருக்கு பொன்னாடையும் தங்கப்பதக்கமும் அணிவித்து சிறப்பித்தார்கள்.

விளம்பர அன்பளிப்பு:

ம. சின்னராசா,
கோகிலா தேநீர்சாலை,
கொடிகாமம்.

(சி/702)

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு: 16 — 03 — 1955



உதிர்வு: 11 — 04 — 1997

## இ. சுந்தரலிங்கம்

(உரிமையாளர், சுந்தரலிங்கம், கராஜ், டச்சுறோட் சாவகச்சேரி)

அந்தியேட்டிக் கிரியைகள் சித்திரை மாதம் 28 ஆம் நாள் (11-05-97) ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகளில் கலந்து கொண்டோருக்கும் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும், பல வழிகளில் உதவி புரிந்தோருக்கும் உற்றார், உறவினருக்கும் எமது மன மார்ந்த நன்றிகள்.

- குடும்பத்தினர்

சரசாலை வடக்கு,
சரசாலை.

(சி-681)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கோழித் தீவனமாகப் பாவிக்கக் கூடிய அரிசி வகைகள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. ம. மயூரன் குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில். [47219]

நல்லூர் வடக்கில் சகல வசதிகளுடன் கூடிய 9 பரப்பு காணியும் கட்டடமும் விற்பனைக்கு உண்டு. நல்லூர், சட்டத்தரணி லிங்கா துரைராசாவுடன் தொடர்பு கொள்ளவும்! தரகர் வேண்டாம், செல்லக்கண்டு. [46851]

### புலமைப்பரிசில் வினாத்தாள்

மே 11, மே 25 பயிற்சி வினாத்தாள் பெற்றுக் கொள்ளலாம் வினாத்தாள் I, வினாத்தாள் II விடைத்தாளுடன் விலை 10 ரூபா. ஜூன் மாதம் வாரமொரு பரீட்சை கிடைக்குமிடம்: சிவ சக்தி புத்தகசாலை அன் - ஸ்ரோர்ஸ் டச்சு வீதி, சாவகச்சேரி. [சி/698]

### வீடு வாடகைக்கு

இல. 600, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) வாடகைக்கு வீடு உண்டு. மேற்படி விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். [46844]

### வீடு விற்பனைக்கு

நவாலி தெற்கில் நான்கு பரப்பு காணியுடன் புதிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: S.K. சீலன், நவாலி தெற்கு, மனிப்பாய். [46842]

### மணமகன் தேவை

இந்து, 38 வயது, பூரம் குற்றமற்ற குறிப்பு - அழகிய பட்டதாரி ஆசிரியைக்கு தகுந்த மணமகன் தேவை. ''சேவை நம்பகம்'' விவாக சேவை, வைமன் வீதி, நல்லூர். [46819]

### ஆங்கிலம்

ஆங்கிலம் A/L G A.Q ஆங்கிலத்தில் PHD. பட்டம் பெற்றவரால் கற்பிக்கப்படும். இராசசிங்கம் இல. 330, (474), நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [46826]

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

கடந்த இரு நாள்களுக்கு முன் யாழ். ஆஸ்பத்திரி வீதியில், பெறுபதிமிக்க மக்கள் வங்கி கிளை காசோலை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலையின் உரிமையாளரிடம் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம். [46838]

### புறோயிலர் இறைச்சிக்கோழி

புறோயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. No. 101, பலாலிறோட், (இலுப்பையடிச் சந்தி அருகாமை) கந்தர்மடம், யாழ்ப்பாணம். [46806]

### திருமண சேவை

சேவை நோக்குடைய, நம்பகமான முன்னணியிலுள்ள, நிறுவன மயப்படுத்தப் பட்ட திருமண சேவையொன்றில் அனைத்து மணமக்களது குறிப்புகளையும், தகவல்களையும் ஒருங்கிணைப்பதே தகுந்த விரைவான திருமணங்களுக்கு உரிய வழியாகும். முன்னின்று செயற்படும் உதவியற்றோருக்கும் நல்லாதரவு அளிக்கின்ற ''சேவை நம்பகம்'' விவாக சேவையில் மணமக்களும், பெற்றோர்களும் நேரில் இணையலாம். 51, வைமன் வீதி, நல்லூர். (46821)

### வாடகைக்கு

பருத்தித்துறைவீதி, 3 ஆம் கட்டை, கட்டப்பிராய் சந்தியில் அமைந்திருக்கும் ஐயனார் கடைத்தொகுதியில் 2 கடைகளும், பலாலி வீதி வீரமாகாளி அம்மன் கோயில் சந்தியில் [கந்தர்மடம் சந்திக்கும் அருகாமையில்] 2 கடைகளும் வாடகைக்கு உண்டு, தொடர்பு: கெ. பாலசுப்பிரமணியம், 3 ஆம் கட்டை, கல்வியங்காடு. (46693)

### ஆங்கில வகுப்புகள்

தனிப்பட்டவர்களுக்கு அல்லது சிறு குழுக்களுக்கு ஆங்கில வகுப்புகள் லண்டன் பட்டதாரி ஆசிரியரால் நடத்தப்படுகின்றது. ஆண்டு 6 — 11 தொடர்பு: 112, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (46846)

### தேவை

நல்ல நிலையிலுள்ள பாவித்த தமிழ் தட்டச்சுப் பொறிகள் இரண்டு ஒரு கல்வி நிறுவனத்திற்குத் தேவை விற்க விரும்புவோர் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். S ஜெகதீஸ், 119/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (46832)

### மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம். இளந்தோற்ற பட்டதாரி மணமாகி தனித்து வாழ்கின்ற உயர் பண்புகளுடைய அழகிய பெண்ணுக்கு உயர் பண்புகளுடன் (49— 54 வயதுக்குள்) கணவன் வாழ்க்கைத் துணைவராகத்தேவை, ''சேவை நம்பகம்'' விவாக சேவை, வைமன் வீதி, நல்லூர். (46820)

### மாறி எடுக்கப்பட்டு விட்டது

அடைக்கல மாதா ஆலய சிவில் நிர்வாக அலுவலகத்தில் ''லுமாலா'' சைக்கிளும், ஹீரோ சைக்கிளும் மாறி எடுக்கப்பட்டு விட்டன. மாறி எடுக்கப்பட்ட சைக்கிளை வைத்திருப்பவர் குருநகர் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில்தொடர்பு, கொள்ளவும். (46849)

### தவறிவிட்டது

யோ. றமேஸ்குமார் என்பவரின் 090800002, இலக்க விசேட அடையாள அட்டை நீர்வேலிக்கும், புத்தூருக்கும் இடையில் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் 86, கோயில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (49848)

---

குருவே துணை

உயர்திரு. வே. முருகேசு சுவாமி

அவர்களின்

## 2 ஆம் மாத குருபூசை

(11 — 05 — 97)

மேற்படி சுவாமி அவர்களின் 2 ஆம் மாத குருபூசை இன்று செல்வச்சந்நிதி முருகனின் அபிஷேக ஆராதனையுடன் ஆரம்பமாகி சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் மகேஸ்வர பூசையுடன் நிறைவுறும். சுவாமி அவர்களின் அன்பர்கள், அடியார்கள் வருகை தந்து அத்தினத்தைச் சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

ஆ. அருணாசலம்,
செல்வச்சந்நிதி,
தொண்டமானாறு.
(சி/699)

---

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 03 — 03 — 1925

மறைவு: 11 — 05 — 1987

அமரர்

### மரியாம்பிள்ளை சிமியாம்பிள்ளை

(முன்னாள் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர்)

மன்னவ, நீங்கள் மறைந்து பத்தாண்டுகள்
இன்னல்கள் தொடர நாங்கள் கடந்தோம்.
புன்னகை குன்றா உங்கள் வதனம்
இன்னமும் உயிர்ப்புடன் எங்கள் நெஞ்சினில்.
அஞ்சலி செய்வோம், ஆறுதல் பெறுவோமோ? ...

புனித மரியாள் பேராலயத்தில் நாளை திங்கட்கிழமை காலை 6. 30மணிக்கு(புதிய நேரம்) இரங்கற்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்

56, ஒட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.

(46828)

---

வடமராட்சியில் நற்செய்தி!

## விசேஷ ஆராதனை

செய்தி அளிப்பவர்: போதகர் S. G. நிரஞ்சன் (கொழும்பு)

பொருள்: ✶ "ஆராதனை" ★

இடம்: அசெம்பிளி ஒப் கோட் மண்டபம் (பிரதான வீதி, மருதடி, பருத்தித்துறை)

காலம்: 11 - 5 - 97 ஞாயிறு


நேரம்: பி.ப. 2.00 மணி - 4.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(46840)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் பொன்னம்பலம் சபாரத்தினம்

(இளைப்பாறிய அதிபர், யாழ். அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை.)

தோற்றம்: 13 - 04 - 1921

மறைவு: 23 - 04 - 1996

திதி: 11 - 05 - 1997

ஊருக்கு உபதேசம் சொன்னாய் இன்று எமதூரையே கலங்க வைத்து விட்டுச் சென்று விட்டாய். காலம் எல்லாம் இரவு பகல் வெயில் மழை என்று பாராது உழைத்து பாசமுடன் எமை வளர்த்த அன்புத் தெய்வமான குருவே, ஆசானே, அப்பாவே! தங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை தினமும் பிரார்த்திக்கிறோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டி, உற்றார், உறவினர்.

'வாகினி'
சிங்கராயர் வீதி,
கல்வியங்காடு.

(46692)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

### செல்வரத்தினம் தனேஸ்வரி (தங்கா)

(ஆசிரியை, யா/ துரையப்பா வித்தியாலயம், கொழும்புத்துறை.)

தோற்றம்: 03 — 03 — 1947

மறைவு: 23 — 04 — 1996

திதி: 12 - 05 - 1997

நீங்கள் இவ்வுலகை விட்டுப்பிரிந்து ஒரு வருடம் சென்று விட்டாலும் உங்கள் நினைவு எங்கள் மனதை என்றும் வேதனைப் படுத்துகிறது.

பிரிவால் துயருறும்:
பொ. செல்வரத்தினம் (கணவன்),
சகோதரன், சகோதரிகள், மைத்துனி,
மைத்துனர்கள், பெறாமக்கள்,
உற்றார், உறவினர்கள்.

52 விதானை வீதி,
சுண்டுக்குளி.

(46786)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கவனம், நாய் கடிக்கும்!

கூடி நாய் கவனம்!

இந்த வாசகம் அழகாக எழுதப்பட்டு வீட்டு வெளிப் படலைகளில், இரும்புக் கதவுகளில் பல வீடுகளில் தொங்கவிடப்பட்டிருந்ததைப் பலரும் மறந்திருக்க மாட்டார்கள். ஆனால் இப்போது அதனைக் காண்பது அரிதாக இருக்கிறது. பலருடைய வீட்டு மதில்களில் பொருத்தப்பட்டிருந்த இரும்புக் கதவுகள் (கேற்றுகள்) மறைந்து விட்டன. மக்கள் இடம்பெயர்ந்த பின்னர் அவற்றில் மிகப் பலவும் இடம்பெயர்க்கப்பட்டு விட்டன! யாழ். நகரத்தையும் அதனை அண்டிய பகுதிகளிலும் மட்டுமன்றி கிராமப் பகுதிகளிலும் அதே நிலை தான்.

தமது வீட்டுக்கு வரும் உறவினர்கள், நண்பர்கள், விருந்தினர்கள், மற்றவர்கள் நாயால் கடியுண்டு வீணாக மரண அபாயத்தை எதிர்நோக்கக் கூடாது என்ற நல்லெண்ணத்துடனேயே அந்த எச்சரிக்கை வாசகம் தொங்கவிடப்படும் வழக்கம் உண்டாயிற்று.

இப்போதோ, மக்கள் வீடுகளில் வளர்த்த நாய்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது. சொந்த இடமென்று இல்லாமல் அங்கும் இங்கும் அலைந்து திரியும் தெரு நாய்களும் வியாதிகண்ட சொறி நாய்களுமே வளர்ப்பு நாய்களை விட அதிகம்.

அதனால் நாய்க் கடிக்கு ஆளாவோர் எண்ணிக்கை இப்போது அதிகரித்துள்ளது. கோடை காலத்தில் வெப்பம் கூடுதலாக உள்ள மாதங்களில் நாய்களுக்கு நீர் வெறுப்பு நோய் என்ற விசர் நோய் வருவதுண்டு. இந்த நோய் கண்ட நாய்கள் கடித்த பலர் உயிராபத்தை அடைவது உண்டு.

நாய் கடித்த பின்னர் அதற்கு மருத்துவம் நாடித் திரியாமல் நாய்க்கடிக்கு ஆளாகாமல் கவனமாக, விழிப்பாக இருப்பதே, நடமாடுவதே நல்லது. வீதிகளில் நடந்து செல்லும் போதும், சைக்கிள், மோட்டார் சைக்கிள் போன்ற இருசில்லு வாகனங்களில் செல்லும் போதும் நாய்களைக் கண்டால் தூரவிலகிச் செல்லும் பழக்கத்தைக் கைக்கொள்ள வேண்டும். சிறுபிள்ளைகள் நாய்களோடு விளையாடுவதை அனுமதிக்கலாகாது.

நாய்களை வளர்ப்பவர்கள் அவற்றுக்கு விசர் நோய் வராமல் தடுப்பதற்கான தடுப்பூசி ஏற்றுதல் மற்றும் தடுப்புச் சிகிச்சைகளைத் தவறாது செய்து மற்றவர்களுக்கு உயிராபத்து வராமல் தடுப்பதில் அக்கறை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

தெருநாய்களை அப்புறப்படுத்துவதிலும் உள்ளூராட்சி மற்றும் சுகாதாரப் பகுதியினர் தீவிர கவனம் செலுத்துவது அவசியம்.

நாயினால் கடியுண்டோர் உரிய நேரத்தில் உரிய சிகிச்சை பெற்றால் உயிராபத்தைத் தடுக்கலாம்.

நாய் கடிப்பது சின்ன விடயமல்ல; விளையாட்டு விவகாரமும் அல்ல; சமூக ஆபத்தானது. எனவே நாய் வளர்ப்போர், பொது மக்கள், சம்பந்தப்பட்ட அரச சேவை அதிகாரிகள் ஆகிய முத்தரப்பினரும் விழிப்புடன் நடந்து கொள்ளவேண்டும்.

அவச் சாவுகள் தடுக்கப்பட வேண்டும்; தவிர்க்கப்பட வேண்டும். இதற்கு எல்லோரது கூட்டு முயற்சியும், அக்கறையும் அவசியம்.

# இடம்பெயர்ந்த அரச ஊழியருக்கு விசேட விடுமுறைச் சலுகை

வடமராட்சி, மே 11

1995, 1996 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த அரசாங்க ஊழியர்களுக்கு விசேட விடுமுறைச் சலுகை வழங்கப்பட்டுள்ளது.

இச் சலுகை பற்றி வடக்கு கிழக்கு மாகாண பொது நிர்வாக பிரதி பிரதம செயலாளர் க. பரமலிங்கம் சகல திணைக்களத் தலைவர்கள், அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் ஆகியோருக்கு அறிவித்துள்ளார்.

வடக்கில் 1995, 1996 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக இங்கு கடமையாற்றிய அரசாங்க உத்தியோகத்தர் பலர் இடம்பெயர்ந்து வேறு திணைக்களங்களிலும் வேறுமாவட்டங்களிலுள்ள அரச அலுவலகங்களிலும் கையொப்பமிட்டு வந்துள்ளனர். இவர்கள் தத்தமது வரவை தாம் கடமையாற்றிய இடம்பெயர்ந்த மாவட்டங்களின் திணைக்களத் தலைவர்களால் உறுதிப்படுத்தி சான்றிதழ் சமர்பபித்திருந்தால் அவர்களுக்கு இவ்விடுமுறைச் சலுகையை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

இடம்பெயர்வு நடந்த ஆண்டில் பயன்படுத்தப்படாத அமைய ஒய்வு விடுமுறைகள் முந்திய ஆண்டில் பாவிக்கப்படாத ஒய்வு விடுமுறைகள், தனது சேவைக் காலத்திலே உபயோகப்படுத்திக் கொள்ளாத கடந்த இரண்டு ஆண்டு கால ஒய்வு விடுமுறைகள் என்பவற்றுடன் மீதிக்காலத்தை விசேட விடுமுறையாகக் கணித்தே இச்சலுகை விடுமுறை வழங்கப்படுகிறது.

இந்த விசேட சலுகைகள் 1-4-97-க்கு முன்னர் சொந்த இடம் திரும்பிய அலுவலர்களுக்குஉரித்தாகும். (ஐ-173)

## ஆதீனத்தில் ஞானசம்பந்தர் குருபூசை

கொழும்புத்துறை, மே 11

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் திருஞான சம்பந்த சுவாமிகள் குருபூசை நேற்று ஆரம்பமானது குருபூசை தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். திருஞான சம்பந்தர் வீதி உலாவும் தினமும் நடைபெறும்.

(ஐ-30)

## சுத்தானந்த யோகி

சித்தாந்தத் தேன்பிலிற்றிச் செந்த மிழில்
தித்திக்கத் தித்திக்கக் கவிதை யாத்து
முத்தான பாடல்கள் முத்து முத்தாய்
முத்தமிழின் அன்னை பதம் சூட்டி மகிழ்
சுத்தானந் தயோகியின் திருவு ருவம்
சுந்தரம்சேர் ஒளியாக எம்ம னத்தே
நித்தானு பவமாகத் தோன்று தையா!
நீணிலத்தில் யோகிமுகம் காணு வோமோ?

★ ★ ★ ★

எண்ணரிய கவிதைகளை வடித்துத் தந்தார்
எட்டாத கருத்தெல்லாம் எளிதில் தந்தார்
பண்ணமுதப் பாடல்களைப் பாடிப் பாடிப்
பக்திசெயக் கீர்த்தனைகள் ஆக்கித் தந்தார்
கண்ணனைய கட்டுரைகள் எழுதி எங்கள்
கருங்கல்லு மனத்தினையும் கரைய வைத்தார்
வண்ணமுற வாழவழி வகுத்துத் தந்தார்
வண்டமிழின் யோகிமுகம் காணு வோமோ?

★ ★ ★ ★

யோகநிஷ் டையிலூறும் மேனி தோன்றும்
தேகமதில் தெய்வீகப் பிரபை தோன்றும்
ஏகனையே துதிக்கின்ற நெஞ்சம் தோன்றும்
ஏடுமெழுத் தாணியதன் கரங்கள் தோன்றும்
வேகமுடன் கற்பனையின் லோகம் சென்றே
வீழுமழை போல்சொரியும் கவிதை தோன்றும்
தாகமுடன் தமிழ்ஞானம் பருகும் அந்தத்
தவமுனிவன் யோகிமுகம் காணு வோமோ?

— கவிமாமணி ந. வீரமணி ஐயர்

(கவியோகி சுத்தானந்த பாரதியாரின் பிறந்தநாள் நினைவு தினம் இன்று 11-5-1997 ஆகும்.)

## மார்பு நோய் ஆஸ்பத்திரி ஊழியருக்கு கஷ்ட நிவாரண கொடுப்பனவு நீண்டகாலமாக கிடைக்கவில்லை

திருநெல்வேலி, மே 11

சாவகச்சேரியில் இயங்கி வரும் காங்கேசன்துறை மயிலிட்டி அரசினர் மார்பு நோய் வைத்தியசாலை ஊழியர்களுக்கு கடந்த வருடம் ஜூலை மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரை வழங்கப்பட வேண்டிய கஷ்ட நிவாரணக் கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை என்று முறையிடப்பட்டுள்ளது.

இதேவேளை சயரோக வார்ட்டில் பணியாற்றுவோருக்கான விசேட மாதாந்தகொடுப்பனவுகளும் கடந்த பல வருட காலமாக வழங்கப்படவில்லை என்றும், அத்துடன் உத்தியோகபூர்வ சீருடையும் இதுவரை வழங்கப்படவில்லை என்றும் இங்கு கடமையாற்றும் ஊழியர்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-135)

# சமூகத்தில் சமாதானம் மலர்வதற்கு தனிநபர் இருதய சமாதானம்தேவை

அன்னையாம் அருள் நிறைமரியின் அருள் தேடும் அன்பு மக்களே! செபியுங்கள் செபமாலை. ஓதுங்கள் ஓயாமல்; என்றும் வாடா மாலையாம் செபமாலையை அவள் தாமரைப் பாதங்களுக்குச் சூடுங்கள்; செபமாலைக் கன்னி, தேவ மகனை உலகுக்கு ஈந்த கன்னி, விண்ணகத்தின் திறவு கோலாம் பக்திக் கனியை ஊட்டும் அன்னை; உங்களுக்காக இடைவிடாது தன்மகனை வேண்டுகிறாள்.

என்றும் எதிலும் தொல்லையும் குழப்பமும் மிகுந்த இந்த உலகை மாற்ற அன்னையவள் கூறிய வழியைக் கடைப்பிடியுங்கள். செபமாலை செபியுங்கள். சமாதானத்தின் இராக்கினியை கூவி அழையுங்கள். உங்கள் குரலை அவள் கேட்பாள்.

லூர்து நகரக் குகையிலே ஏழைச் சிறுமிக்குக் காட்சி கொடுத்து, மேன்மைப்படுத்தியவள் நம் அன்னை. பாத்திமாவிலே 3 சிறுவர்களைத் தூதுவர்களாய்த் தெரிவு செய்து எம்மைச் செபமாலை செபிக்கும்படி கூறிய எமது அன்னை இன்றும் எம்மோடு இருக்கிறாள்.

நம்மை அலைக்களிக்கும் சாத்தானைத் தன் காலின் கீழ் நசுக்க வல்லவளாய் இருக்கின்றாள். கையிலே செபமாலை ஏந்திக் காணப்படும் அன்னையாம் கன்னி எம்மை; எமக்காகவும், பிறருக்காகவும் நாட்டின் சமாதானத்துக்காகவும் செபிக்கக் கேட்கிறாள்.

நிரந்தரமானதும் உண்மையானதுமான சமாதானம் ஏற்பட வேண்டுமாயின், உலகில் இன்று காணப்படும் சீர்கேடானநிலை மாற வேண்டும். மக்களிடையே காணப்படும் ஊழல்கள் மறைய வேண்டும். முதலாளி - தொழிலாளி பிணக்குகள் நீங்கவேண்டும்; மனிதரிடையே ஏற்பட்டுள்ள சாதி பேதங்களும் நிறத்துவேஷங்களும் அடியோடு அழிதல் வேண்டும். யாவரும் ஒரு குலம்; யாவரும் ஓர் இனம் என்பதை ஒவ்வொரு மனிதனும் உணரவேண்டும்; மக்களிடையே நீதியும் பிறர் சிநேகமும் நிலவ வேண்டும்.

இவை யாவும் சாத்தியமாக வேண்டுமாயின் அதற்கு ஒரே ஒரு வழிமட்டுந்தான் உண்டு. அதுதான் நமதாண்டவர் காட்டிய வழி. அவர் நமக்குப் போதித்த சத்தியங்களை அநுசரித்தாலன்றி உண்மைச் சமாதானம் உலகில் ஏற்படாதென்பது வெளிப்படை. உலக இராஜதந்திரிகள் சமாதானத்திற்கான வழிகளைத் தேட முயலுகின்றனர். ஆனால் அதற்கென நமதாண்டவர் காட்டியுள்ள வழியைப்பின்பற்ற அவர்களுக்கு அக்கறையில்லை; திவ்விய இயேசுவின் பிரதிநிதியின் சொல்லுக்குச் செவி சாய்ப்பதில்லை.

மேலும் உலக மேதாவிகள் சமானத்திற்காக உழைப்பதை விட பன்மடங்கு அதிகமாக உழைக்கின்றாள் நம் அன்னை. யுத்தத்தால் அல்லலுறும் உலகிற்காக தேவனிடம் பரிந்து பேசுகின்றாள். சமாதானத்தை நிலைநாட்ட உதவும் எத்தனங்கள் ஜெபம், தபம் என்னும் கருவிகளெனப் போதித்துள்ளாள்.

அன்று பாத்திமாவில்அவள் கூறியதை மறுபடியும் ஞாபகப்படுத்திக் கொள்வோம்: ''நான் உங்களுக்குச் சொல்வதை மனிதர் செய்தால் அநேக ஆத்மாக்கள் இரட்சிக்கப்படுவார்கள். உலகிற்குச் சமாதானம் உண்டாகும், யுத்தம் முடிவுக்கு வரும். ஆனால் கடவுளுக்கு விரோதமாகச் செய்யப்படும் பாவங்கள் நிற்காவிட்டால் இதைவிட இன்னுமொரு கொடிய யுத்தம் துவங்கும்... இதைத் தடுப்பதற்காகத்தான் விரோத நாடுகளை என் மாசற்ற இருதயத்திற்கு ஒப்புக்கொடுக்க வேண்டுமென்றும் ஐந்து முதல் சனிக்கிழமைகளில் பரிகார நன்மை வாங்கி ஒப்புக்கொடுக்க வேண்டுமெனவும் நான் விரும்புகிறேன். என் விருப்பத்திற் கிசைந்தால் விரோத நாடுகள் மனந்திரும்பும்; சமாதானம் நிலவும்...,,

மனிதரிடையே சமாதானம் நிலவுவதற்கு ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் சமாதானம் ஏற்படுவது அவசியம். இந்த இருதய சமாதானம் உலகில் நாம் அடையக்கூடிய மாபெருந் திரவியமாகும். சர்வேசுவரனுடைய கற்பனைகளை அனுசரித்து அவருடைய சித்தத்திற்கமைந்து புண்ணிய வழியில் நடந்தாலன்றி நமக்கு இச் சமாதானம் கிட்டாது. புண்ணிய சாங்கோபாங்கத்தில் வளர்ச்சியுற இச்சமாதானம் இன்றியமையாதது. இந்தச்சமாதானத்தையும் நமக்குப்பெற்றுத் தருமாறு சமாதான இராக்கினியை மன்றாடுவோம்.

- அருட்தந்தை செலஸ்டின்

## ஞாயிறு நற்பிரசாதம்

### நாளை

**சித்திரை 29**

திங்கட்கிழமை

திதி: ஷஷ்டி

பின் இரவு 3-15 வரை.

நட்சத்திரம்: புநர்பூசம்

பிற்பகல் 1.29 வரை.

ஷஷ்டி விரதம்

சுபநேரம்: 11. 54- 1.24

ராகுகாலம்: 7.24-8.54

(பகலுக்கும் இரவுக்கும் [illegible] நேரப்படி)

## உரும்பிராய் மத்திய மருந்தக அதிகாரி நியமனம்

திருநெல்வேலி, மே 11

உரும்பிராய் அரசினர் மத்திய மருந்து சாலை பொறுப்பதிகாரியாக பதிவு பெற்ற வைத்திய அதிகாரி எஸ். முத்துக்குமாரசாமி யாழ். சுகாதார திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

நீண்ட காலமாக இப்பதவி வெற்றிடமாக இருந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-135)

## தமிழ் திறன் போட்டிகளில் நாட்டுக்கூத்து

பருத்தித்துறை மே 11

அகில இலங்கைத் தமிழ் மொழித் திறன் போட்டியில் வடமோடி, தென்மோடி நாட்டுக் கூத்தும் திறந்த போட்டியாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

அண்மையில் கல்வி அமைச்சினால் அனுப்பப்பட்ட சுற்றறிக்கையில் நாட்டுக்கூத்து குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா இது தொடர்பாக சுட்டிக்காட்டியதை அடுத்து தமிழ்த்திறன் போட்டியில் தற்போது நாட்டுக் கூத்தும்சேர்க்கப்பட்டிருக்கிறது. (ஐ-118)

## குருத்துவ வெள்ளிவிழா

நெடுந்தீவுப் பங்கின் ஆறாவது குரவரும் நெடுந்தீவு புனித யாகப்பர் ஆலயத்தின் முதற் குருவுமாகிய அருட்திரு பற்றிக் ஞானப்பிரகாசம் அடிகளின் குருத்துவப் பணியின் இருபத்தைந்தாவது வருட வெள்ளிவிழா எதிர்வரும் புதன்கிழமை நெடுந்தீவில் நடைபெறும்.

விழாவுக்கான ஏற்பாடுகளை புனித யாகப்பர் ஆலய சபையினரும் நெடுந்தீவு பங்கு மக்களும் இணைந்து செய்துள்ளனர்.

(ஐ-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை நகரப் பகுதிக்கு மாத இறுதிக்குள் மின்சாரம்

பருத்தித்துறை, மே 11

பருத்தித்துறை நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிக்கு இம்மாத முடிவுக்குள் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நான்கு பெரிய ஜெனரேட்டர்களில் ஒன்றை பருத்தித்துறைக்கு இலங்கை மின்சார சபை ஒதுக்கி உள்ளது.

இந்த ஜெனரேட்டரை பருத்தித்துறை பஸ் டிப்போ வளவினுள் நிரந்தரமாக வைப்பதற்கான கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் நகரசபை எல்லைக்குட்பட்ட மின் விநியோகம் முன்னர் நகர சபையினால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. அதனை இலங்கை மின்சார சபை பொறுப்பேற்று பழைய மின் தூண்களை அகற்றி புதிய மின்தூண்களை நட்டு வருகின்றது.

அத்துடன் மின் இணைப்புக்கான புதிய கம்பிகளையும் மாற்றி வருகின்றது. (இ-118)

## தென் மராட்சி ஓய்வூதிய வவுச்சர்கள்

தென்மராட்சி, மே11

தென்மராட்சிப் பிரதேச ஓய்வூதியர்களின் மே மாத வவுச்சர்கள் பிரதேச செயலக ஓய்வூதியக் கிளையில் கடந்த வியாழக்கிழமை முதல் வழங்கப்பட்டுவருகின்றன.

ஓய்வூதியர்கள் தமது அடையாளத்தைச் சமர்ப்பித்து வவுச்சர்களைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார். (இ)


# சுப்பஸோ வின்

இன்றைய வெளியீடு...!

**R. B. சௌத்திரியின்**

ரமேஸ், அரவிந், வடிவேல் நடித்த

# அக்கா

(THE ORIGINAL)

அண்மையில் வெளியான ''அருணாச்சலம்'' திரைப்படத்திற்கு நிகரான திரைக்காவியம்.

குறிப்பு:-

யாழ்ப்பாணத்தில் பாடல்களையும் திரைப்படங்களையும் C Dயிலிருந்து பதிவு செய்து கொடுக்கப்படும் ஒரே ஒரு நிறுவனம் சுப்பஸோ - வீடியோ ஸ்தாபனம் என்பது குறிப்பிடத்தக்கது.

(சி/705)

# வெங்கடேஸ்வரா

சைக்கிள், சைக்கிள் உதிரிப்பாக

## விற்பனை நிலையம்

வெங்கடேஸ்வரா சைக்கிள், சைக்கிள் உதிரிப்பாக விற்பனை நிலையம் மீண்டும் 07-05-97 முதல் இல 79, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்கள்

வெங்கடேஸ்வரா.

79, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

(46796)


யாழ்ப்பாணம் வணிகர் கழகம்
பொருள்கள் ஏற்றுவதற்கான கப்பல் சேவை

## அன்பான வேண்டுகோள்

கொழும்பில் இருந்து கப்பல் மூலம் பொருள்களைக் கொண்டுவர விரும்பும் வர்த்தகர்கள் எமது கழகத்துடன் 17-05-97 வெள்ளிக்கிழமைக்கு முன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

யாழ். மாவட்டத்தைச் சார்ந்த ஏனைய வணிகர் சங்க உறுப்பினர்கள் தமது சங்கத்தின் சிபார்சுடன் விண்ணப்பத்தை எமக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

கொண்டுவர விரும்பும் பொருள்களுக்கு வர்த்தக அமைச்சின் ஊடாக பாதுகாப்பு அமைச்சின் (M O D.) அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.

கப்பற் கட்டணம் முற்பணமாகச் செலுத்தப் படுதல் வேண்டும். பொருள்களை உரிய காலத்தில் துறைமுகத்துக்குக் கொண்டுவந்து கப்பலில் ஏற்றுவதற்கு ஒழுங்கு செய்யத் தவறின் அந்தத் தாமதத்துக்கான குற்றப்பணம் அறவிடப்படும்.

துறைமுகத்தினைக் கப்பல் வந்து சேரும் முன் அனுப்பும பொருள்களின் பட்டியலின் இரு பிரதிகள் எமது கழகத்துக்குக் கையளிக்கப்படுதல் வேண்டும்.

கப்பலில் அனுப்பப்படும் சகல பொருள்களில் அல்லது பொதிகளில் தெளிவான குறியீடுகள் இடப்படல் வேண்டும்.

நன்றி.

**தி. குஞ்சிதபாதம்.** தலைவர்

**சி. நமசிவாயம்** செயலாளர்

(சி/703)

# ஜோயல் பெராவை சுட்டது யார்?

# பாகுபாடற்ற விசாரணை தேவை

## 'ராவய' ஆசிரியர் கோருகிறார்

கொழும்பு, மே 11

இம்மாதம் முதலாம் திகதி கொழும்பில் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான பபுவா நியூ கினியைச் சேர்ந்த ஜோயல் பெராவையின் படு கொலை குறித்து பாகுபாடற்ற விசாரணை தேவை.

மேற்கண்டவாறு 'ராவ' ஆசிரியர் கோரி உள்ளார்.

'ராவய' பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன்பி.பி. சியின் சிங்கள சேவைக்கு இது தொடர்பாக அளித்த பேட்டியில் பின்வருமாறு தெரிவித்தார்.

'றோஹான் ரத்வத்தையே சுட்டார் என்பதற்கு சாட்சியங்கள் உண்டு. சுட்டவர் யார்? அவர் என்ன உடையணிந்திருந்தார் என்பது மாத்திரமல்ல அடையாள அணி வகுப்பு ஒன்றுக்கு ஒழுங்கு செய்யப்பட்டால் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவரை தன்னால் அடையாளம் காட்ட முடியும் என சம்பவத்தை நேரில் கண்ட ஒருவர் தெரிவிக்கிறார்.

இவ்வாறான சூழ்நிலையில் சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்தவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி அடையாள அணி வகுப்பு ஒன்றுக்கு ஒழுங்கு செய்வது பொலீஸாரின் கடமை ஆகும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இந்தச் சம்பவத்துடன் மிகவும் குறைந்த தொடர்புடையோர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அதே நேரம் அதிகம் தொடர்புடையவர்கள் கைது செய்யப்படவுமில்லை. இந்த வழக்குத் தொடர்பாக வேண்டப்படுபவர்கள் என அறிவிக்கப்படவுமில்லை இது தவறானது — அநியாயமானது.

இச்சம்பவம் தொடர்பாக தான் பொலீஸில் ஆஜராக வேண்டுமா என றோஹான் ரத்வத்தை பிரதிப் பொலீஸ் மா அதிபர் டிகிரி பண்டா திசாநாயகாவிடம் தொலைபேசியில் வினாவியதாகவும் ஆனால் தேவையில்லை என பிரதிப் பொலீஸ் மா அதிபர் தெரிவித்ததாகவும் தெரியவருகிறது. ஒருவருக்கு மாத்திரம் விசேட சலுகைகள் வழங்குவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

உண்மையில் இது பாதுகாப்பு அமைச்சரின் தவறாகும். பாதுகாப்பு அமைச்சரே பொலீஸ் மற்றும் இராணுவத்துக்கும் பொறுப்பானவர். எனவே தனது மகனுடன் தொடர்புடைய சம்பவம் ஒன்று தொடர்பாக பொலீஸார் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யவில்லை எனில் சட்டம் அனைவருக்கும் சமமாக அமுல் படுத்தப்படுகிறதா என்ற சந்தேகம் எழுகிறது.

உண்மையில் சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்தோர் அனைவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு அடையாள அணிவகுப்பு ஒன்றுக்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஆனால் இந்த நடவடிக்கைகள் அனைத்திலும் அமைச்சரின் மகன் சேர்க்கப்படவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

துப்பாக்கிப் பிரயோகம் செய்தது யார்? அவர் என்ன உடை அணிந்திருந்தார்? என்ற விவரத்தை நேரில் கண்கண்ட சாட்சி தெரிவிக்கும் போது சந்தேக நபரைக் கண்டு பிடிப்பது பொலீஸாரின் கடமை ஆகும்.

முஸ்லிம் பெண் ஒருவரும், மின் தொழில் நுட்பவியலாளரும் இச் சம்பவத்தை ஆரம்பத்திலிருந்து நேரில் கண்டுள்ளனர்.

இவர்கள் றோஹான் ரத்வத்த சம்பவம் இடம்பெற்ற இடத்தில் இருந்ததாகவும் பொலீஸாருக்குத் தெரிவித்துள்ளனர்''

இவ்வாறு விக்டர் ஐவன் தெரிவித்தார். (இ-10)

## மணலாற்றில் மோதல்

கொழும்பு, மே 11

மணலாறு பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

இந்த மோதலில் விடுதலைப் புலிகள் உறுப்பினர் ஒருவர் உயிரிழந்ததாகப்படை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-5)

## கிளாலிக் கடலில் ஷெல் வீச்சு

தென்மராட்சி, மே 11

நேற்றுக் காலை 5 30 மணி அளவில் கிளாலிக் கடலில் துப்பாக்கிப் பிரயோகமும் ஷெல் வீச்சும் சுமார் 15 நிமிட நேரம் இடம்பெற்றன. (இ-117)

## மேலும் 7 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்)

றுக் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

யாழ். ஈ. பி. டி. பி. அலுவலகத்தில் உள்ள இவர்களைப் பொறுப்பேற்குமாறு உறவினர்களிடம் கேட்கப்பட்டுள்ளது.

நேற்று விடுதலையான ஏழு பேரின் விவரம் வருமாறு:-

★ இராசையா ராஜ்மோகன் மந்துவில் கிழக்கு
★ நவரத்தினம் சந்திரதாஸ் — உடுவில் கிழக்கு
★ சின்னக்குட்டி ராஜா — மயிலணி வடக்கு
★ யோகநாதன் மோகனதாஸ் — சுதுமலை தெற்கு
★ கந்தன் செல்வம் — கைதடி வடக்கு
★ வேலாயுதம் ஜெயசூரியன் — தெல்லிப்பளை கிழக்கு
★ கனகராஜன் திருஞானசம்பந்தன் — சுதுமலை வடக்கு. (இ-3)

## கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்)

570, 571, 573, 574, 576, 577, 578, 580 ஆகியவற்றுக்கு அனுமதி கிடைத்துள்ளதாகவும் —

இப் பட்டியலில் உள்ளவர்கள் தமது பயணத் திகதியை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் — கேட்கப்பட்டுள்ளது.

கப்பலிலோ அல்லது விமானத்திலோ பயணம் செய்பவர்கள் தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, பாஸ்போட், தபால் அடையாள அட்டை ஆகியவற்றில் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது. (இ-3)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

இலங்கை திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலையையும் ஒப்படைக்குமாறு கடந்த வெள்ளிக்கிழமை அப்பாடசாலையின் அதிபருக்கு அறிவிக்கப்பட்டது. எனினும் படையினர் அங்கு வந்துசேரவில்லை.

இதற்கிடையில் வவுனியாவில் பாடசாலைகளில் படையினர் தங்கி இருப்பதால் [illegible] கப்படுவதாக வன்னி எம். பிக்கள் பலர் தெரிவித்துள்ளனர். (இ-10-5)

# மேலும் 2 வாரங்கள் சஜிந்த சேவையில்

திருகோணமலை, மே. 11

திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறைக்கு அகதிகளை ஏற்றிச் செல்லும் பணியில் சஜிந்த கப்பல் மேலும் இரு வாரங்கள் ஈடுபடவிருக்கிறது.

அகதிகளை ஏற்றி இறக்கும் பணிக்காக அமர்த்தப்பட்டிருந்த இக்கப்பலின் சேவைக்காலம் கடந்த 8 ஆம் திகதியுடன் முடிவடைந்ததால் இக்கப்பல் நேற்று கொழும்பு நோக்கிப் புறப்படவிருந்தது.

திருகோணமலயில் இருந்து காங்கேசன்துறைக்கு அகதிகளை ஏற்றிச் செல்ல வேண்டியுள்ளதால், ஜனாதிபதியின் உத்தரவின் படி இக்கப்பல் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை சேவையில் ஈடுபடவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

தனியார் பயணிகளை ஏற்றிச் செல்ல அமர்த்தப்பட்டுள்ள ''நியூகோ என்டூரன்ஸ்'' தனது பணியை வெள்ளி ஆரம்பித்தது. (இ-3-150)

# ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை வடக்கு - கிழக்கில் மட்டுமே!

கொழும்பு, மே 11

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களுக்கு ஆங்கில ஆசிரியர்கள் போதுமான அளவு உள்ளனர் என்றும் —

எனவே ஆங்கில ஆசிரியர்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சையை அந்த மாகாணங்களில் நிறுத்தத் தீர்மானித்துள்ளதாகவும் கல்வி, உயர்கல்வி அமைச்சர் றிச்சட் பத்திரான நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். (இ-10)

# அகதிகளை அழைத்து வரும் பொறுப்பு கை மாறுமா?

திருகோணமலை, மே 11

திருகோணமலையில் இருந்து அகதிகளை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் செல்லும் பணியை மாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு பொறுப்பேற்பது குறித்து ஆராயப்பட்டுள்ளது.

இந்தப்பணி தற்சமயம் திருகோணமலை பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாகாணசபை ஆளுநர் காமினி பொன்சேகா தலைமையில் மாகாணசபை அலுவலகத்தில் நடந்த மாநாட்டில், இந்த விடயம் பற்றி ஆராயப்பட்டதாயினும், இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

இந்த மாநாட்டில் அரச அதிகாரிகள், மாகாணசபை அமைச்சுச் செயலாளர்கள், பிரதேச செயலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-3-150)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது [illegible] மனையில் 11-05-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org